கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.கு.இராசாமணி.இ.ஆ.ப.,

-----

ப.மு.14366/2020/ஈ1 நாள்: 15.02.2021

பொருள்: தண்ணீர் எடுத்தல் - கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையம் வட்டம் - ஓடந்துறை கிராமம் - அரசு வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் - குடிநீர் பயன்பாட்டிற்காக பவானி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 562.25 கனமீட்டர் அளவிற்கு தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கி ஆணையிடல்.

பார்வை:
1. அரசாணை எண்.238, பொதுப்பணித்துறை நாள்:15.02.1979.
2. தமிழ்நாடு வேளாண்மை பலகலைக்கழக பதிவாளர் அவர்களின் கடித எண் TNAU/Lifting water/Bhavani River/2020 நாள். 10.08.2020.
3. இவ்வலுவலக கடித எண் . ந.க. எண். 14366/2020/ஈ1, நாள். 06.11.2020
4. கண்காணிப்பு பொறியாளர், நீ.ஆ.து, பவானி வடிநில வட்டம், ஈரோடு கடித எண்: வப/தவஅ/வ.ஆ1/கோ.160C வனக்கல்லூரி/ 149M, நாள்: 31.12.2020.
5. கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியரின் 4559/2020/அ1, நாள் 22.01.2021.

⚙⚙⚙⚙⚙⚙

**உத்திரவு**

பார்வை 1-ல் காணும் கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம் ஜக்கனாரி பாதுகாக்கப்பட்ட வனத்திற்குட்பட்ட (Resereved Forest) சிறுமுகை வனச்சரகப் பகுதியில், ஓடந்துறை கிராமத்தில் மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சிமையம் (Forest College and Research Institute) அமைந்துள்ளது எனவும், இக்கல்லூரியில் உள்ள சுமார் 400 மாணவர்கள் மற்றும் 80 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் 100 ஆய்வகபணியாளர்கள் தங்கி, பயின்று மற்றும் பணிபுரிந்து வருகின்றனர் எனவும், பணியாளர்கள் குடியிருப்பு மற்றும் இதர மனை வாழ்க்கை உபயோகத்திற்காக (Domestic Purpose), ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள தண்ணீர் போதுமானதாக இல்லை எனவும், எனவே பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்க அனுமதி வழங்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கோரியிருந்தார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கோரிக்கை தொடர்பாக ஈரோடு, பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை, பவானி வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் பார்வை 4-ல் காணும் கடிதத்தில் பின்வருமாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

மேட்டுப்பாளையம் வட்டம் ஜக்கனாரி பாதுகாக்கப்பட்ட வனத்திற்குட்பட்ட (Resereved Forest) சிறுமுகை வனச்சரகப் பகுதியில், ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சிமையத்தில் (Forest College and Research Institute) மாணவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்களின் குடியிருப்பு, ஆய்வக பயன்பாடு மற்றும் இதர மனை வாழ்க்கை உபயோகத்திற்காக நாளொன்றுக்கு 1124.50M$^3$தண்ணீர் தேவைப்படுவதாகவும், இதில் 562.25M$^3$தண்ணீர் கல்லூரி வளாகத்திற்குள் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் இருந்து பயன்படுத்திக் கொள்வதாகவும், பற்றாக்குறையாக உள்ள 562.25M$^3$தண்ணீரை பவானி ஆற்றிலிருந்து எடுப்பதற்கு அனுமதி கோரியுள்ளனர் எனவும், மேலும், மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு தண்ணீர் தேவை கணக்கிடப்பட்டுள்ளதாக கருத்துருவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஈரோடு, பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை, பவானி வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**Water requirement (as per day)**

| Sl.No | Particulars | Water Requirement (Litres) |
|---|---|---|
| 1 | Requirement for 1500 Students, Scientist, Professors, Non-Technical staff and labours at 135 litre / person / day | 2,02,500 |
| 2 | Requirement for 200 Cattle and goat at 400 litre /day | 80,000 |
| 3 | Requirement for 500 Acres Research field at 1600 litre/day/acre | 8,00,000 |
| 4 | Requirement for 15 Research Laboratories at 1000 litre/day/lab | 15,000 |
| 5 | Requirement for 200 Person Floating Population at 135 litre/ person / day | 27,000 |
| | **Total Requirement** | **11,24,500 (or) 1.1245 MLD** |

மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மனை வாழ்க்கை மற்றும் ஆராய்ச்சியின் உபயோகத்திற்கு நாளொன்றுக்கு 1124.50M$^3$ தண்ணீர் தேவைப்படுவதாகவும், இதில் 562.25M$^3$தண்ணீர் கல்லூரி வளாகத்திற்குள் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணறுகளில் இருந்து பயன்படுத்திக்கொள்வதாகவும், பற்றாக்குறை உள்ள 562.25M$^3$தண்ணீரை பவானி ஆற்றிலிருந்து

(எடுக்க உத்தேசித்துள்ள 0.56225MLD (562.25 $M^3$) = ((562.25x35.315)/(60x60x24)) = 0.23கன அடி / வினாடி என்ற விகிதத்தில்) எடுத்துக் கொள்ள உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதாகவும், மேலும், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய வாளகத்தில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து பெறப்படுத் தண்ணீர் குடிநீர் தேவைக்கு உகந்ததாக இல்லை என வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன தலைவர் அவர்கள் தெரிவித்ததன் அடிப்படையிலும், வனப்பயிர்கள் ஆராய்ச்சி நடைபெறும் நிலங்களின் பாசன தேவைக்கு ஏற்கனவே வளாகத்தில் அமைந்துள்ள நீர் ஆதாரம் போதுமானதாக இல்லாததாலும், தற்போது கல்லூரி வளாகத்தில் மேம்படுத்தப்பட்ட கட்டிட பணிகள் நடைபெற்று வருவதால் மனைப்பயன்பாட்டிற்கு தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர் எனவும், ஈரோடு, பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை, பவானி வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி ஆராய்ச்சி மற்றும் மனை வாழ்க்கை உபயோகத்திற்கு நாளொன்றுக்கு 0.56 மில்லியன் லிட்டர் (0.23 Cu.sec) தண்ணீர் தேவைப்படுகிறது எனவும், இது பவானி வடிநிலத்தின் மூலம் காவேரி ஆணையத்தின் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி குடிநீர் மற்றும் இதரபயன்பாடுகளுக்கான 20% அளவான 494.12 Cu.sec என்ற அளவில் வழங்கப்பட வேண்டிய நிலையில் ஏற்கனவே 770.22 Cu.sec என்ற அளவில் குடிநீர் வழங்கப்படுவதால், இத்திட்டத்திற்கு நீர் தேவை கோடைகாலங்களில் பவானி ஆற்றிலிருந்து கிடைக்கப்பெறாத நிலையில் உள்ளது எனவும், இவ்வாறு நீர்வரத்தைவிட ஏற்கனவே கோடை காலங்களில் அதிகமாக தண்ணீர் தேவை உள்ள நிலையில் எதிர்காலத்தில் பவானி வடிநிலத்தின் தண்ணீர் தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய இயலாத நிலை உருவாகும் எனவும், மேலும், தற்போது அனுமதி கோரும் இப்புதிய திட்டத்திற்கு மட்டுமல்லாமல் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட திட்டங்களுக்கும் நீர்பற்றாக்குறை ஏற்படும் என்பதும் குறிப்பிட்டு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது எனவும், இருப்பினும் குடிநீர் தேவைக்கு முன்னுரிமை வழங்கும் பொருட்டும், மேற்படி மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அரசு கல்லூரி என்பதை கருத்தில் கொண்டும் சிறப்பினாக கருதி அனுமதி வழங்கும்பொருட்டு அரசாணை எண்.238. நாள்:15.02.1979–ன்படி மனைவாழ்க்கை பயன்பாட்டிற்காக புதியதாக அமையப் பெறவுள்ள திட்டங்களுக்கு கண்காணிப்புப்பொறியாளர் அவர்கள் மூலம் உரிய முன்அனுமதி பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதி வழங்கலாம் எனவும், தேசிய மற்றும் மாநில நீர்கொள்கையின் அடிப்படையில் குடிநீருக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இத்திட்டம் அரசின் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் என்பதால் இதனை சிறப்பினமாக கருதி மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் (Forest College and Research Institute) மாணவர்கள், பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்களின் குடியிருப்பு, ஆய்வக பயன்பாடு மற்றும் இதர மனை வாழ்க்கை உபயோகத்திற்காகவும், மரம் சாகுபடியை ஊக்குவிக்க

விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நவீன வனவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆகியவற்றின் நலன் கருதி பவானி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 562.25 கனமீட்டர் அளவிற்கு தண்ணீர் எடுப்பதற்கு நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கலாம் எனவும், ஈரோடு, பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை, பவானி வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு தண்ணீர் எடுக்க கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிக்கதாசம்பாளையம் கிராமம், ரீ.ச.எண்.2/1-ல் (மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு –C, பிளாக்–1) உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் பவானி ஆற்றிலிருந்து புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சேமிப்புக் கிணறு மற்றும் பம்ப் ரூம் கட்டுமானங்கள் அமைக்க பொதுப்பணித்துறைக்கு சொந்தமான நிலத்தில் 2.00சென்ட் அளவுள்ள நிலங்கள் குத்தகை அடிப்படையில் வழங்குவது தொடர்பாக அரசின் அனுமதி பெறும்பொருட்டு கருத்துரு தலைமைப்பொறியாளர்,நீ.ஆ.து., கோவை மண்டலம், கோவை அவர்களுக்கு தனியே சமர்ப்பிக்கப்படும் எனவும், அரசின் அனுமதி பெற்றபின் மேற்படி சேமிப்புக் கிணறு மற்றும் பம்ப் ரூம் கட்டுமானங்கள் மேற்கொண்ட பிறகு மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கும்பட்சத்தில் வனக்கல்லூரிக்கு குடிநீர்த் தேவைக்கான தண்ணீர் பவானி ஆற்றிலிருந்து எடுக்க அனுமதிக்கப்படும் எனவும் ஈரோடு, பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை, பவானி வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் பரிந்துரை செய்துள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கோரிக்கையில் பேரில் கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியர் புலத்தணிக்கை மற்றும் விசாரணை மேற்கொண்டு பார்வை 5-ல் காணும் கடிதம் வாயிலாக கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், ஜக்கனாரி பாதுகாக்கப்பட்ட வனத்திற்குட்பட்ட (Reserved Forest) சிறுமுகை வனச்சரகப் பகுதியில் ,ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம் பாளையம், டவுன் 2/1-இல் அமைந்துள்ள பவானி ஆற்றில் கிணறு அமைத்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து கொண்டு ஓடந்துறை கிராமத்தில் உள்ள அரசு காலைகள் மற்றும் வன நிலங்களின் வழியாக குழாய் பதித்து தண்ணீர் கொண்டு உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும், செயற்பொறியாளர், நீ.ஆ.து., பவானிசாகர் அணைக்கோட்டம், பவானிசாகர் கடிதம் எண் வப/இவஅ.1/கோTNAU/ 212SE/2020, நாள்:10.12.2020.-ல், வனக்கல்லூரி மூலம் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிக்கதாசம்பாளையம் டவுன் வார்டு-C, பிளாக்-1 டவுன் சர்வேஎண்2/1-இல் உள்ள பொதுப்பணித் துறைக்கு சொந்தமான பவானி ஆற்றில் புதியதாக அமைக்கப் பெறவுள்ள சேமிப்பு கிணறு மற்றும் பம்ப் ரூம் கட்டுமானங்கள்

அமைக்க பொதுப்பணித் துறைக்கு சொந்தமான நிலத்தில் 2.00 சென்ட் அளவுள்ள நிலங்கள் குத்தகை அடிப்படையில் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர் எனவும், மேலும் அரசு கடித எண் 13085/டி2/2012/1 நாள்:21.06.2012.ல் நீர்நிலை புறம் போக்குகளில் கட்டுமான பணிகளுக்கு அரசு மட்டத்தில் மட்டுமே அனுமதி வழங்க இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே இது குறித்து அரசு மட்டத்தில் முடிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசாணை 238 பொதுப்பணித்துறை, நாள்:15.02.1979-ல் தெரிவித்துள்ளவாறு மனை வாழ்க்கைப் பயன் பாட்டிற்காக புதியதாக அமையப் பெறவுள்ள திட்டங்களுக்கு கண்காணிப்புப்பொறியாளர் அவர்கள் மூலம் உரிய முன் அனுமதி பெற்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதி வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே, தேசிய மற்றும் மாநிலநீர் கொள்கையின் அடிப்படையில் குடிநீருக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இத்திட்டம் அரசின் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் என்பதாலும், அனுமதி கோரும் தண்ணீரின் அளவு கீழ்பவானி அணையின் பாசன ஆயக்கட்டுகளை பாதிக்காதவகையில் உள்ளதாலும், மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சிமையத்தில் (Forest College and Research Institute) மாணவர்கள், பேராசிரியர்கள், அலுவலகபணியாளர்களின் குடியிருப்பு, ஆய்வக பயன்பாடு மற்றும் இதர மனை வாழ்க்கை உபயோகத்திற்காகவும், மரம் சாகுபடியை ஊக்குவிக்க விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நவீன வனவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆகியவற்றின் நலன் கருதி பவானி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 562.25 கன மீட்டர் அளவிற்கு தண்ணீர், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், ஜக்கனாரி பாதுகாக்ககப்பட்ட வனத்திற்குட்பட்ட(Reserved Forest) சிறுமுகைவனச்சரகப் பகுதியில், ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம்பாளையம்வார்டு சி, பிளாக் 1 ட.ச.2/1 - இல் அமைந்துள்ள பவானி ஆற்றில் கிணறு அமைத்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுக்க பொதுப்பணித்துறை விதித்துள்ள நிபந்தனைகளுடன் அரசளவில் மட்டுமே அனுமதி வழங்க இயலும் என்ற விதி முறைகளுக்கேற்ப அனுமதி வழங்கலாம் எனவும் கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பதிவாளரின் கோரிக்கை தொடர்பாக நன்கு பரிசீலனை செய்யப்பட்டு, ஈரோடு, பொதுப்பணித்துறை / நீர்வள ஆதாரத்துறை, பவானி வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் பரிந்துரை மற்றும் கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியர் பரிந்துரை ஆகியவற்றின் அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், ஜக்கனாரி பாதுகாக்கப்பட்ட வனத்திற்குட்பட்ட (Reserved Forest) சிறுமுகை வனச்சரகப் பகுதியில், ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் உள்ள சுமார் 400 மாணவர்கள் மற்றும் 80 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் 100 ஆய்வகபணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் மனை

10. அரசு மற்றும் நீர் உபயோகிப்பாளர்கள் குழுவின் ஒப்புதல் இல்லாமல், நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட கூடுதல் தண்ணீர் எடுக்க அனுமதிக்க இயலாது.
11. வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் தனது தேவைகளுக்கு ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு முன் நீர்வள ஆதாரத்துறையுடன் ஒப்பந்தம் (குத்தகை நிலம் மற்றும் தண்ணீர் எடுப்பதற்கு) செய்துகொள்ள வேண்டும். ஒப்பந்தத்தினை உரிய காலத்திற்குள் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் தண்ணீர் எடுப்பது தடை செய்யப்படும்.
12. பற்றாக்குறை காலத்தில் ஆற்றில் தண்ணீர் எடுப்பதற்கு அவ்வப்போது விதிக்கப்படும் பொதுப்பணித்துறையின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.
13. அனுமதிக்கப்பட்ட அளவினைவிட தண்ணீர் குறைவாக எடுக்கப்பட்டிருப்பினும் ஒப்பந்தத்தில் உள்ள தண்ணீர் அளவிற்கே முழுத்தொகையையும் கட்டப்பட வேண்டும்.
14. ஆற்றில் தண்ணீர் எடுப்பதற்கு எதிர் காலத்தல் அரசு புதிய தொகையினை நிர்ணயம் செய்தால் அத்தொகையினை நிர்ணயம் செய்த அன்றிலிருந்து கட்ட வேண்டும்.
15. ஆற்றின் கரையில் சேமிப்பு கிணறு, பம்ப்ரூம் மற்றும் இதரவகை கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் அதனுடைய முழு வடிவிலான அனுமதிக்கப்பட்ட ( Plan Approved Copy) வரைபடங்கள் மேலொப்பமிட்டு ( Counter Signed) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
16. தற்காலத்தில் தண்ணீர் அரிதான பொருளாகி வருவதாலும் தண்ணீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும் தண்ணீருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணம் அத்தியாவிசயமான தேவைக்கேற்ப (அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்குட்பட்டு) மட்டும் தண்ணீர் எடுக்கப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கோயம்புத்தூர்.

15.2.2021

மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம்பாளையம் , பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது:-

1. இந்த நீர் விநியோக திட்டங்களில் உள்ள தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சூழ்நிலைகளை வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் ( Forest College and Research Institute) முடிவு செய்து கொள்ள வேண்டும்.
2. இத்திட்டத்தின் மூலம் எடுக்கப்படும் நீரினால், ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள தண்ணீர் விநியோகத் திட்டங்கள் செயல்படுவதற்கு எவ்வித இடையூரும் ஏற்படுத்தக்கூடாது.
3. நீர் ஆதார பணியின் குத்தகைக்கான அரசின் அனுமதி பெற்ற பின்னர் மட்டுமே நீர் சேமிப்பு கிணறுகள் மற்றும் பம்புசெட் அறை ஆகிய கட்டுமான பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படும். மேலும் ஆறுகளில் பாயும் நீர்போக்கை தடுப்பதோ அல்லது ஆற்றின் திசை மாற்றம் ஆகியவை ஏற்படாமல் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பாக மண்டல தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட வேண்டும்.
4. ஆற்றுப் படுகையில் சேதம் ஏற்படாத வகையில் குழாய்கள் பதிக்கப்பட வேண்டும். அவ்வாறு சேதம் ஏற்பட்டால் அதனை வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் தங்கள் துறையின் சொந்த செலவில் சரிசெய்ய வேண்டும்.
5. தண்ணீர் எடுப்பதால், ஆற்றின் நீர் பாய்ச்சல் தடுக்கப்படமாட்டாது என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.
6. ஆற்றின் கரைகளில் நடைபெறும் கட்டுமானப் பணிகள் அனைத்தும் நீர்வள ஆதாரத் துறையின் அலுவலர்கள் முன்னிலையில்தான் நடத்தப்படவேண்டும்.
7. ஆற்றில் தண்ணீர் இல்லாத நேரம் மற்றும் நீர்வரத்து குறையாக உள்ள சமயங்களில் கூடுதல் தண்ணீர் வேண்டுமென வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் கோரிக்கை வைத்தால் நிராகரிக்கப்படும்.
8. வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் அரசு நிர்ணயித்துள்ள உரிமை பங்கு கட்டணங்கள் (Royalty Charges) (அந்தந்த காலக்கட்டத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள கட்டணம்) வருடந்தோறும் முறையாக முன்னரே செலுத்தப்பட வேண்டும்.
9. வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் எடுக்கும் நீரினை அளக்க உரிய உபகரணங்கள் ( Water Meter) நிறுவ வேண்டும். மேலும், நீர் அளக்கும் கருவி (Water Meter) பொருத்தப்பட்டபின், ஒவ்வொரு மாதமும் ஆற்றில் எடுக்கப்படும் நீரின் அளவினை நீர்வள ஆதாரத்துறையின் செயற்பொறியாளர் அவர்களின் ஆய்விற்கு உட்படுத்த வேண்டும்.

வாழ்க்கை உபயோகத்திற்காக (Domestic Purpose), சிக்கதாசம் பாளையம், டவுன் க.ச.எண் 2/1-இல் அமைந்துள்ள பவானி ஆற்றில் அரசு அனுமதி பெற்று கிணறு அமைத்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து கொள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையிலும் 3 (மூன்று) ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

**இணைப்பு: நிபந்தனைகள்**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கோயம்புத்தூர்.

பெறுநர்:-
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், லாலிரோடு, கோயம்புத்தூர்-2.

நகல்:
1. முதன்மை செயலர் மற்றும் நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை -5.- தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2. வருவாய் கோட்டாட்சியர், கோயம்புத்தூர் வடக்கு.
3. கணகாணிப்பு பொறியாளர், நீ.ஆ.து, பவானி வடிநில வட்டம், ஈரோடு
4. வருவாய் வட்டாட்சியர், மேட்டுப்பாளையம் வட்டம்.
5. முதல்வர்,அரசு வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், மேட்டுப்பாளையம்.
6. இருப்பு கோப்பு.

கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள்
முன்னிலை:- திரு.த.இராமதுரைமுருகன், எம்.ஏ.,

ப.மு.1370/2021/ஈ.1

நாள்: 03.02.2021.

பொருள்: பாதைவரி அனுமதி - கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையம் வட்டம் - ஓடந்துறை கிராமம் - அரசு வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் - குடிநீர் பயன்பாட்டிற்காக பவானி ஆற்றிலிருந்து அரசு புறம்போக்கு காலைகள் வழியாக குழாய் பதித்து தண்ணீர் எடுத்துச் செல்ல பாதைவரி அனுமதித்து -.உத்தரவிடுதல்.

பார்வை:

1. கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டாட்சியர் ந.க.4559/2020/அ1. நாள்: 22.12.2020.
2. மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் அறிக்கை ந.க.2933/2020/அ7, நாள்: 17.12.2020

---------

**உத்தரவு:**

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம் ஜக்கனாரி பாதுகாக்கப்பட்ட வனத்திற்குட்பட்ட (Resereved Forest) சிறுமுகை வனச்சரகப் பகுதியில், ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சிமையம் (Forest College and Research Institute) அமைந்துள்ளது எனவும், இக்கல்லூரியில், சுமார் 400 மாணவர்கள் மற்றும் 80 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் 100 ஆய்வகபணியாளர்கள் தங்கி, பயின்று மற்றும் பணிபுரிந்து வருகின்றனர் எனவும், பணியாளர்கள் குடியிருப்பு மற்றும் இதர மனை வாழ்க்கை உபயோகத்திற்காகவும (Domestic Purpose), மரம் சாகுபடியை ஊக்குவிக்க விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நவீன வனவியல் தொழில் நுட்ப ஆராய்ச்சி மற்றும் நீர்ப்பாசனம் செய்ய ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள தண்ணீர் போதுமானதாக இல்லை எனவும், வனக்கல்லூரி ஆராய்ச்சி மற்றும் மனைவாழ்க்கை உபயோகத்திற்காக பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கவும், பாதைவரி அனுமதியும் கோரியுள்ளார்.

கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் வட்டம் ஜக்கனாரி பாதுகாக்கப்பட்ட வனத்திற்குட்பட்ட(Reserved forest)சிறுமுகை வனச்சரகப் பகுதியில் ஆராய்ச்சி ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம்பாளையம் கிராமம் புலஎண் 459-ல் அமைந்துள்ள பவானி ஆற்றில் கிணறு அமைத்து மின் மோட்டார்மூலம் தண்ணீர் எடுத்துகொண்டு

ஓடந்துறை கிராமத்தில் கீழ்கண்ட காலைகள் மற்றும் வன நிலங்களில் வழியாக குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது .

| வ.எண். | க.ச.எண். | நிலத்தின் வகைபாடு | நிலையில் பயன்பாட்டில் உள்ளது | குழாய் பதிக்கஉள்ள தூரம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | 14/4 | நத்தம் | பஞ்சாயத்துசாலை | 25.3 |
| 2 | 53 | நத்தம் S.F.7 மண் ரோடு | மனையிடங்கள்பஞ்சாயத்துசாலை | 130.0 |
| 3 | 48/1 | வண்டிப்பாதை | நெடுஞ்சாலை | 46.7 |
| 4 | 47/2 | பட்டாபூமி | மனையிடங்கள் பஞ்சாயத்துசாலை | 73.6 |
| 5 | 41/1A | பட்டாபூமி | மனையிடங்கள் பஞ்சாயத்துசாலை | 121.0 |
| 6 | 42/1A | பட்டாபூமி | மனையிடங்கள் பஞ்சாயத்துசாலை | 135.6 |
| 7 | 42/2 | பாரஸ்ட் மார்ஜின் | -- | 2.2 |
| 8 | -- | வன நிலம் | -- | 87.0 |
| | | | மொத்தம் | 621.4 |

ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம்பாளையம் கிராமம் புலஎண் 459-ல் அமைந்துள்ள பவானி ஆற்றில் கிணறு அமைத்து மின்மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து கொண்டு ஓடந்துறை கிராமத்தில் மேற்காண் அட்டவணையில் கண்டுள்ள காலைகளின் வழியாக குழாய் பதித்து தண்ணீர் கொண்டு செல்ல ஓடந்துறை கிராம பொது மக்களின் ஆட்சேபனை இருப்பின் தெரிவிக்கும் பொருட்டு ஓடந்துறைகிராமத்தில் 12.11.2020 அன்று"அ1"அறிவிப்பு பிரசித்தம் செய்யப்பட்டு கிராம பொதுமக்களின் வாக்குமூலமாக பெறப்பட்டுள்ளது எனவும், ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம்பாளையம் கிராமம் புலஎண் 459-ல் அமைந்துள்ள பவானி ஆற்றில் கிணறு அமைத்துமின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்துகொண்டு ஓடந்துறை கிராமத்தில் மேற்காண் அட்டவணையில் கண்டுள்ள காலைகளின் வழியாககுழாய் பதித்து தண்ணீர் கொண்டுசெல்ல உள்ளாட்சி மன்ற தீர்மானம் பெறப்பட்டுள்ளது .

மேற்படிதீர்மானத்தில் "மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையமானது ஊராட்சியின் சாலை வழியாக குழாய் பதித்து செல்லும் போது ஊராட்சியின் சாலைகள் மற்றும் குடிநீர் குழாய்கள் பழுது ஏற்பட்டால் அதனை உடனே சரி செய்வதற்கு உண்டான தொகையினை உள்ளாட்சிக்கு செலுத்தப்பட்ட பின்னரே

குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் குழாய் பதித்து செல்லஅனுமதி பெறப்பட்டுள்ளது .

ஒடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம்பாளையம் கிராமம் புலஎண் 459-ல் அமைந்துள்ள பவானி ஆற்றில் கிணறு அமைத்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து ஓடந்துறை கிராமத்தில் புலஎண் 48/1-ல் அமைந்துள்ள நெடுஞ்சாலையின் வழியே குழாய் பதித்து செல்ல கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் குழாய் பதித்து செல்ல அனுமதி பெறப்பட்டுள்ளது .

1. பாதைவரி கட்டணம் மாவட்ட வருவாய் அலுவலர் கோவை அவர்களுக்கு செலுத்தி அதன் அனுமதி நகல் நெடுஞ்சாலைத்துறை அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் .

2.பாதைவரி செலுத்தி அனுமதி பெற்று நெடுஞ்சாலைத்துறைக்கு உரிய சீரமைப்பு தொகை செலுத்தி நெடுஞ்சாலைதுறையின் அனுமதி பெற்ற பின்னரே குடிநீர் உபயோகத்திற்காக குழாய் அமைக்கும் பணிமேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம்பாளையம் கிராமம் புலஎ்ண் 459-ல் அமைந்துள்ள பவானி ஆற்றில் கிணறு அமைத்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்துசெல்ல வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தால் வனத்துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது .

எனவே, ஓடந்துறை கிராமத்தில் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு சிக்கதாசம்பாளையம் கிராமம் புலஎண் 459-ல் அமைந்துள்ள பவானி ஆற்றில் கிணறு அமைத்து மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து செல்ல ஊராட்சி மன்ற இசைவு மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் இசைவு பெறப்பட்டுள்ளதால், அரசுவிதிகளுக்குட்பட்டு பாதைவரி அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. இந்த அனுமதியானது மேற்கண்ட ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். இவ்வுத்தரவு வரும் காலத்தில் அரசினால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படத்தக்கதாகும்.

2. பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் உள்ளாட்சித்துறையினரிடம் குழாய் பதித்துக்கொள்ள பெற்றுள்ள இசைவுக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும்.
3. வருவாய் நிலை ஆணைகளில் கண்டுள்ள விதிமுறைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும்.
4. இந்த பாதைவரி அனுமதி முடிவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே புதுப்பிக்க விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.
5. மனுதாரரின் கோரிக்கையின்படி அரசு புறம்போக்கு காலைகள் வழியாக குழாய் பதிப்பதற்கு வட்டாட்சியரால் நிர்ணயிக்கப்படும் பாதைவரியினை தவறாது செலுத்த வேண்டும்.
6. நெடுஞ்சாலைத்துறையின் விதிகளுக்குட்பட்டு அனுமதி பெற்றப் பின்னர் தான் Pipe-Line போடப்படவேண்டும்.

3/2/21

மாவட்ட வருவாய் அலுவலர்,
கோயம்புத்தூர்.

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், லாலிரோடு, கோயம்புத்தூர்-2.

நகல்:
1.வருவாய் கோட்டாட்சியர், கோயம்புத்தூர் வடக்கு.
2. வருவாய் வட்டாட்சியர், மேட்டுப்பாளையம் வட்டம்.
3. முதல்வர்,அரசு வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், மேட்டுப்பாளையம்.
4. இருப்பு கோப்பு.

3/2/2021